# விலைவாசி ஏற்றம்

தெருவில் கூடைக்க்காரன் ஆரஞ்சுப்பழம் விற்றுகொண்டு போனான். வீட்டில் கூடத்துப்பெஞ்சிமேல் அமர்ந்து கணவனுடன் சம்பாஷித்துக்கொண்டிருந்த ஜானகி, சம்பாஷணயைநிறுத்திவிட்டு, கூடைக்காரன் கூவினதைக் கவனித்தாள். பழம் விற்பவனின் குரல் மெல்ல மெல்ல காற்றோடு கலந்தோய்ந்தது.

“ஆரஞ்சுக் காலம் வந்தாச்சா?” என்று ஒரு கேள்வியைப் போட்டுவிட்டு சற்று நிறுத்தினாள். ‘வந்தாலும் என்ன? ஏகவிலை கொடுத்து எங்கே வாங்குகிறது? . . . அப்பா! காலம்தான் எப்படி மாறிப்போச்சு! டஜன் கணக்கிலே வாங்கி தின்றபொழுது சகஜமாக இருந்தது. இப்பொழுது அரைடஜன் வாங்கித் தின்பது பெரிய விஷயமாயிருக்கு! இந்த ஆரஞ்சுக்கு வந்த பவிஷைப்பாரேன்!’
என்று தனக்குள் பேசிக்கொள்வதுபோல கணவன் காதுபடச் சொன்னாள்.

ஜானகி இதுபோலப் பேசுவது சகஜமானதால், அவள் கணவன் உடனே ஒன்றும் சொல்லவில்லை. ஜானகியும் மனத்தாங்கல் கொண்டவள்போல சிறிது நேரம் பேசவே இல்லை.

இதைக் கவனித்த ராகவன், “ஆரஞ்சுக்கு பவிஷும் மதிப்பும் வந்துவிட்டது என்று நினைக்கிறாயா? தப்பு! பணத்தின் மதிப்புத்தான் குறைந்துவிட்டது! தெரியுமா?” என்று கேட்டான்.

“தெரியாமலென்ன? ‘பத்து ரூபாயா - ப்பூ! நூறு ரூபாய் தானா - ப்பூ!’ என்று சொல்லும்படியாகத்தானே இருக்கிறது காலம்!”

“ஆமாம் - விலை ஏறிவிட்டது என்று சொல்லுகிறோமே - அது பணத்தின் மதிப்பு குறைந்துவிட்டது என்று அர்த்தமாகிறது. பணம் என்றால் என்ன - சொல்லத்தெரியுமா? சொல்லு!”

ராகவன் கல்லூரியிலே பொருளாதாரம் போதிக்கும் ஆசிரியன். மனைவிக்கும் கொஞ்சம் போதிக்க முற்பட்டான்!

“பணம் என்றால் என்ன என்று மனசுக்குத் தெரியும் - சொல்லவராது எனக்கு!” என ஜானகி மறுமொழியளித்ததும், ராகவன் பேச ஆரம்பித்தான்.

பணம் வாழ்க்கையில் இன்றியமையாத சாதனம். பணத்தை நாம் அதன் உபயோகத்திற்காகத்தான் விரும்புகிறோம். பணம் அதன் பணரூபத்திலே என்ன உதவி செய்யமுடியும்? பணத்தைச் சாப்பிட முடியாது, உடுத்த முடியாது; பணத்தின் மூலம் நமக்குத் தேவையான பண்டங்களையும், சேவைகளையும் பெறுகிறோம். பணத்தைத் தூஷிக்கிறார்களே சில ஞானிகள்? பார்க்கப்போனால் பணம்தான் சுயநலம் இல்லாதது! அதற்கு என்று தனிப்பெருமை, சொந்தப் பெருமை கிடையாது. அது பிறருக்குச் செய்யும் சேவையினால்தான் அதற்குப் பெருமை! மாற்றமுடியாத செல்லாக் காசுக்கு என்ன பெருமை கொடுக்கிறோம் நாம்?
பொருள்களின் மதிப்பை அளவிடும் அளவுகோல் ‘பணம்’. பொருள்களின் மதிப்பை நிர்ணயித்த ஒரு தொகை ‘விலை.’ பண்டத்தின் மதிப்பும், விலையும் ஒன்றாகாது. விலை வேறு; மதிப்பு வேறு. மதிப்பு மாறாது, விலை மாறும்.

ஆரஞ்சு விற்பவன் ஒரு டஜன் பழம் இரண்டு ரூபாய்க்கு விற்றால்,அவன் எதிர்பார்ப்பது, அந்த இரண்டு ரூபாய் மூலம் அவனுக்குக் கிடைக்கக்கூடிய பொருள்களைத்தான். விலைவாசிகள் சராசரி இரண்டு பங்கு

உயருகிறதாக வைத்துக்கொள்வோம். ஆரஞ்சு விலை டஜன் நான்கு ரூபாய். இதனால் ஆரஞ்சினுடைய மதிப்பு ஏறிவிட்டதா? ஒரு டஜன் ஆரஞ்சினுடைய தன்மையும், அது தாகத்தைத் தணிப்பதோ, பசியை அடக்குவதோ, ஆரோக்யமளிப்பதோ, முன்பும் இப்பொழுதும் ஒன்றே தான். பழத்திற்கு நாம் கொடுக்கும் பணத்தின் மதிப்புத்தான் பாதியாகிவிட்டது! பணத்தின் மதிப்பு, அதன் செயலைப் பொருத்தது. அதிக விலையால் அதிக பணம் கொடுக்கும்பொழுது பணத்தின் மதிப்பும்தான் குறைகிறது. குறைந்த பணம் கொடுத்து வாங்கும்போது பணத்தின் மதிப்பு உயருகிறது. ஆகையால், விலைவாசிகளின் உயர்வு, பணத்தின் மதிப்புக் குறைவு. ஒரு குறிப்பிட்ட தொகைப் பணம், முன்னைவிட குறைந்த பண்டங்களுக்குத்தான் உதவுகிறது.

("தெரிந்ததா? புரிந்ததா?" என்று கேட்டான் ராகவன். "தெரிந்துதான் கிடக்கு! புரியத்தான் இல்லை!" என்றாள் ஜானகி. "கேள், புரியவைக்கிறேன்!" என்று ராகவன் தொடர்ந்தான்.)

பலர் பலவிதமாகப் பணத்தை உப்யோகபடுத்துகிறார்கள். மொத்த வியாபாரிகள், மொத்தமாக் பண்டங்களை வாங்குவார்கள். முதலாளிகள்,தொழிலாளிகளை சம்பளம் கொடுத்து வேலைக்கு அமர்த்தி, வேலை வாங்குவார்கள். குடும்பஸ்தர்கள் குடும்பத்திற்கான சாமான்களை வாங்குவார்கள்.

சிமிண்டு வியாபாரி, தன்னிடமிருக்கும் பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகை எத்தனை மூட்டை சிமிண்டு வாங்க உதவும் என்று மதிப்பிடுகிறான். முதலாளி, தன் தொழிளாளிகளுக்கு எத்தனை கொடுக்கவேண்டும் என்று மதிப்பிடுகிறார். குடும்பஸ்தர் தன் வருமானம் எவ்வளவு தூரம் தன் தேவைகளை பூர்த்தி செய்யும் என்று மதிப்பிடுகிறார். பணத்தின் மதிப்பு, அதன் சொந்தக்காரரின் உபயோகத்திற்கு ஏற்றபடி இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு தொகையின் மதிப்பை, இரண்டு மூட்டை சிமிண்டு விலை என்றோ, ஒரு தொழிலாளியின் சம்பளம் என்றோ, பத்துப்படி பருப்பு என்றோ மதிப்பிடுவது சரியா?

(ஜானகி குறுக்கிட்டாள். "ஏன்? தவறு என்ன இதில்? அப்படித்தான் நான் மதிப்பிடுகிறேன். எட்டு வருஷத்திற்கு முந்தி இரண்டு மூட்டை அரிசி வாங்கபோயிருந்த பணம், இப்பொழுது அரை மூட்டை அரிசிக்குத்தான் போதும் என்றுதான் தோன்றுகிறது!" என்றாள் ஆவேசமுடன்.

"அதனால்தான் பணத்தின் மதிப்பு நாலில் ஒரு பங்கு ஆகிவிட்டது என்று தெரிந்துகொள்ளுகிறாய் அல்லவா? இதுமாதிரி, விலைவாசிகளை ஆராயவும், பணமதிப்பினை அறியவும் இந்த முறையில் மதிப்பிடுவது சரிதான்!" என்று புன்சிரிப்புடன் பதிலளித்தான் ராகவன்!)

விலைவாசிகளின் ஏற்றத் தாழ்வு மூலம் பணமதிப்பின் தாழ்வுயர்களை அளவிட ஏறக்குறைய இதுபோன்ற முறைதான் வழக்கத்தில் இருக்கிறது. அதற்கு ஒரு வருடம் அடிப்படையாக எடுத்துக்கொள்ளபடுகிறது. அந்த வருடம் நிதானமான பொருளாதார நிலைமையுள்ளதாக இருக்கவேண்டும். யுத்தகாலங்கள்,கொடும் பஞ்சங்கள் முதலியவற்றிற்கு முந்திய வருடமாக இருக்கவேண்டும். உதாரணமாக 1930 வருடம் வருடம் ஏற்பட்ட கொடும் பஞ்சத்துக்கு முந்திய வருடம் 1929; இரண்டாவது உலகப்போர் துவங்குவதற்கு முன் - 1939. பல முக்கியமான பொருள்களின் விலைகள் அந்த வருடங்களில் எப்படி இருந்தன? எந்த அடிப்படை வருடத்தில் இருந்த சராசரி விலை என்ன? இப்பொழுது எத்தனை பங்கு அதிக விலை? ஐந்து பங்கு அதிக விலையா? சரி - பணமதிப்பு ஐந்திலே ஒரு பங்கு ஆகிவிட்டது!

("இப்படித்தான், சர்க்காரும், பொருளாதார நிபுணர்களுங்கூட ஆராய்கிறார்கள், நீ மட்டுமல்ல!" என்று கூறிய ராகவன் "உன்னைப்போலத்தான் அவர்களும் ஆராய்கிறார்கள் என்று புரிந்துகொண்டாயோ, இல்லையோ? நான் சொன்னதில் ஒன்றுமே புரியவில்லையா?" என்று வினவினான்.)

“சுமாராகப் புரிந்தது. ஆனால் இதெல்லாம் எனக்குத் தேவைஇல்லை! விலைவாசிகள் ஏன் ஏறுகின்றன? ஏன் இப்படி பணமதிப்புக் குறைந்துவிட்டது? இதெல்லாம் புரிந்தால் கொஞ்சம் பிரயோஜனமாயிருக்கும்; மனதிற்கு சமாதானம் ஏற்படும்!” என்றாள் வாட்டமுடன்.

ராகவனோ, “பேஷ் - அப்படிக் கேளு!” என்று உற்சாகமுற்றான்.)

“இதுபோல விலைவாசிகள்ஏறி, பணமதிப்புக் குறைவைதைத்தான் பணவீக்கம் என்று சொல்வார்கள் - கேள்விபட்டிருக்கிறாயா?”

“நாம்தான் பண்டங்களுக்காகவும், பணத்திற்காகவும் வீங்கிருக்கிறோம் என்றால், பணம் எதற்காக வீங்கிவிட்டதாம்?” என்று கேட்டாள் ஜானகி, சற்று தென்புடன்.

(“எல்லாம் கேட்டுக்கொண்டிரு;நீயே பதிலையும் சொல்லிவிடுவாய்! உன் வாயாலேயே வரவழைக்கிறேன்!” என்று ஊக்கமூட்டிவிட்டு ராகவன் மேலே தொடர்ந்தான்.)

இன்று பணம் தண்ணீர்போல இறைபடுகிறது. பணமதிப்பின் குறைவை நான் எல்லோரும் அறிவோம். யுத்தகாலத்திலும், அதற்குப்பின் இதுவரையிலும் விலைவாசிகள் ஏறிக்கொண்டே வந்திருக்கின்றன. இப்பொழுது நாட்டில் பணவீக்கம்!

இந்தப் பணவீக்கம் ஏற்பட காரணம் என்ன? பணம் பொருள்களை வாங்கத்தான் தேவை. பொருள்களை மாற்றிக்கொளள உதவாத பணம் பணம் அல்ல. பணத்தின் தேவை பொருள்களைப் பொருத்தது. இந்தத் தேவைக்கு மேலாக பணப்புழக்க்ம் இருந்தால் பணவீக்கம் ஏற்படுகிறது!

யுத்தகாலத்திலும் அதற்கு பின்னும் அரசாங்கம் ஏராளமான நோட்டு நாணயங்களை அச்சடித்தது. அப்படிச் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பலபங்கு அதிகம் பணம் புழங்கப்பட்டது. யுத்தகாலத்தில், சமூகத்தின் எல்லாத் துறைகளும் போர்வெற்றிக்காக பயன்படுத்தப்பட்டன. தேவைப் பொருள்கள் சமூகத்தின் தேவைக்கு ஈடுகட்டவில்லை. அதனால், ஜனங்கள், போட்டி மனப்பான்மை கொண்டுவிடும்படியாக, பொருள்களுக்கு ‘கிராக்கி’ ஏற்பட்டது. பணப்புழக்க்அம் அதிக உள்ளவர்கள் விலை அதிகம் கொடுத்து வாங்கத் தயங்கவில்லை. விலைகள் ஏறிவிட்டன! ஏற்றுமதிகள் அதிகமாகவும், இறக்குமதிகள் குறைவாகவும் ஆயின. உள்நாட்டில் பண்டங்கள் குறைந்துபோயின.

யுத்தம் நின்ற பிறகும் பணப்புழைக்கம் குறையவில்லை. அரசாங்கத்திற்குச் செலவுகள் பெருகிவிட்டன. பொதுஜனங்களிடமும் பணப்புழைக்கம் அதிகமாகவே இருந்துவிட்டது. சர்க்கார், ஜனங்களின் சேவைக்காகவும் பொருள்களுக்காகவும் பணம் செலவழித்துக்கொண்டே இருந்தது. பொதுஜனங்களும் பொருள்களுக்காகவும் தேவைகளுக்காகவும் பணம் புழங்கியவாறிருந்தனர். ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்திக்கான செலவுகளும் பணத்தின் தேவையை வலியுறுத்தின.

பணவீக்கம் அதிகச் செலவையும் குறிப்பிட்டது. அதன்மூலம் அதிக வரும்படியும் குறித்தது. இந்த அதிக வருமானத்தினால் தேவைகளைக் குறைத்துக்கொள்ளும் அவசியமும் வலுவடையவில்லை.

(“அதிக செலவுதான் ஆச்சு! ஏது அதிக வரும்படி?” என்று கேட்டுக் குறுக்கிட்டாள் ஜானகி.)

“ஒருவனின் செலவு மற்றொருவனுக்கு வரும்படி! நீ நம்மை மட்டும் எடுத்துக்கொண்டு பேசக்கூடாது!நடுத்தர வகுப்பார்களுக்கு எல்லாப் பக்கத்திலும் இடிதான்!” என்று எச்சரித்தான் ராகவன்.)

பணத்தின் சேமிப்பு குறைந்துபோய், செலாவணி அதிகமாகி, பண்டங்களும் குறைந்துபோய்விடவே, பணவீகம் தவிர்க்கமுடியாததாகிவிட்டது.

இதனால், சமூகத்தில் பலதரத்தார் பலவிதமாக பாதிக்கப்படுகிறார்கள். சமூகத்தை, பணங்கொடுப்பவர்கள், பணம் பெறுபவர்கள் என இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம். ப்ணம் கொடுப்பவர்கள் ஒரு தொகையை, சம்பளமாகவோ, ஊதியமாகவோ மதித்துக் கொடுக்கிறார்கள். அந்தத் தொகை, விலைவாசி ஏற்றத்தினால் மதிப்புக் குறைந்து பற்றாக்குறையாக இருப்பதை, பணம் பெருபவர்கள் பெரிதும் உணர்கிறார்கள்.

("புரியவில்லை!" என்று சொட்டு வைத்தாள் ஜானகி.)

கேசவன் பத்து வருடங்களுக்கு முன்பு, ஒரு ஒப்பந்ததின்படி பத்தாயிரம் ரூபாய் ஒருவரிடம் கடன் வாங்கினான். அழகிய பெரிய வீடு கட்டிக்கொண்டான். அந்தத் தொகையை, வட்டியுடனேயே திருப்புகிறான் இப்பொழுது. கடன் கொடுத்த மனிதர் இந்தத் தொகையைக் கொண்டு ஒரு சின்னஞ்சிறு வீடுதான் கட்டத்தான் முடியும்.கடன் கொடுத்தவர் இப்பொழுது பெறும் தொகை, மதிப்புக் குறைந்த தொகையாயிற்றே?

வியாபாரிகளும், முதலாளிகளுமானவர்களுக்கு, விலைவாசி ஏற்றத்தினால் ஊதிய உயர்வுகள் உண்டு. ஆனால் விலைகள் விபரீதமாக ஏறிவிடும்பொழுதுதான் கிடைக்கிறது. அப்பொழுதும், விலை ஏற்றத்திற்கு தகுந்த தொகை கிடைப்பதில்லை.

நிலையான வருமானமுள்ள சம்பளக்காரர்களுக்கு வருமானத்திலே உயர்வு - பஞ்சப்படி, வெகு சொற்பம். இந்தப் பகுதியினர்தான் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள்.

("நம்மைப் போல!" என ஜானகி முணுமுணுத்தாள்.

போருக்குப்பின் நிலைமை சீராகிவிடும் என்றுதான் எல்லோரும் எதிர்ப்பார்த்தார்கள். ஆனால் யுத்தம் முடிந்தபின் யுத்தகாலக் கட்டுபாடுகள் நீங்கியவுடன் பணவீக்கத்தின் விபரீதம் தலைக்காட்டத் தொடங்கியது. யுத்தகாலத்திலே, பொருள்களின் கட்டுப்பாடினாலும், விலைகள் கட்டுப்பாடினாலும், பணவீக்கம் அடங்கியிருந்தது. கள்ள மார்க்கெட், பங்கு மார்க்கெட் ஆகியவற்றில் பெருத்த தொகைகள் ஈடுபட்டதனஅலும், சர்க்கர் விதித்த பல தீர்வைகளினாலும் பணவீக்கத்தின் அபாயம் தெரியவில்லை. ஆனால், யுத்ததிற்குப்பின் பலவரிகளை ஒழித்ததனாலும், கம்பெனிகள் பிரித்துக்கொடுக்கும் லாபத்தொகைகளின் மீதிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதாலும், பணப்புழக்கம் அதிகமாகிவிட்டது. உற்பத்தி பெருகவேண்டியிருந்த நிலைமையில், பொதுஜனங்கள்
உற்பத்திற்குத் தடைசெய்யும் வகையில் நடந்துகொண்டனர். வேலைநிறுத்த இயக்கங்களும் கதவடப்பும், தொழிள்களைத் தடைசெய்தன.

("பண்டங்கள் தேவை என்றுதான் பணம் வீங்கிவிட்டது என்று சொன்னால் சரியாகத்தான் இருக்கும் போலிருக்கு!" என்று ஜானகி ஆச்சரியப்பட்டாள்!)

நமக்குச் சுதந்திரம் வந்தது. சர்க்கார் செலவு பெருகியது, பலவிதமாக. அகதிகள் பிரச்னை நாட்டிற்குப் பெருஞ் செலவு வைத்துவிட்டது. ஏற்றுமதிகள் பெருகின. உள்நாட்டில் அந்த ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் ஏறின. விலைவாசி உயர்வினால் உற்பத்தித் தொழில் செலவு அதிகமானதால் முதலாளிகள் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு அதிகவிலை போட்டதை சர்க்கார் அனுமதித்தது. போக்குவரத்துச் சாதனங்களின் குறைவால் பண்டங்களின் நடமாட்டம் தடைப்பட்டது. ஏற்கெனவே மாகாணங்களிலே அதிக லாபத்திற்கு விற்பதை வெருவிய சர்க்கார், சுயமாகவே தடைகள் சில விதித்தது._ப் பண்டங்களின்

நடமாட்டம் பெருகியது. கொஞ்சம் பண்டங்களுக்காக பெருந் தொலைகள் துரத்திக்கொண்டுபோய்ப் பிடித்தன. விலைவாசிகள் குறையவில்லை. ஜனங்களோ 'விலை குறையும்' என்ற நம்பிக்கை இழந்து, 'விலை ஏறிவிடும்' என்னும் பீதிக்குள்ளாகி, சாமான்களை வாங்கிவிடத் தயங்கவில்லை. முதலாளிகள், வியாபாரிகள் ஆகியோர், சர்க்காரின் உபதேசங்களைக் கருதாமல், பொதுநலம் பாராமல், சுயநலம் மேலோங்கி, பண்டங்களைப் பதுக்கினார்கள், கள்ள வியாபாரம் செய்தனர். பொதுஜனங்களும், சர்க்கார் போதனை மறந்து, சர்க்காரின் செயல்களிலே நம்பிக்கையற்று, கள்ளமார்க்கெட் பொருள்களை வாங்கினார்கள். கள்ளமார்க்கெட் செழித்தது. பதுக்கப்பட்ட பொருள்கள் வெளியே வரவில்லை. பணப்புழக்கம் அதிகமாகி, லாபம் அதிகமாகி, விலைகள் அதிகமாகியும், உற்பத்தி பெருகும் வழி பிறக்கவில்லை. பணத்தின் சேமிப்பு அவசியமாயிருந்த சமயத்தில், பண்டங்களின் சேமிப்பும், பதுக்கலும் நிகழ்ந்தது. சர்க்காருக்கு ஒத்துழைக்காமல், ஜனங்கள் தீமைகள் இழைந்தனர்.

("கள்ள மார்க்கெட்டிலே பொருள் கிடைக்கும்பொழுது, ஜனங்கள் பட்டினிகிடக்க முடியவில்லை! பண்டங்கள் கிடைக்காமலா? - இருக்கிறது, அதிக விலையில்! பண்டங்கள் இல்லை, உற்பத்தி பெருகவேண்டும் என்று சர்க்கார் முறையிட்டதை ஜனங்கள் எப்படி நம்பமுடியும்? என்று சந்தேகம் கேட்டாள் ஜானகி. "எல்லோருக்குமே மலிவு விலையிலே கிடைக்கும் வழியைக் கோல, சர்க்காரிலே பூரண நம்பிக்கை வைத்து, நேர்மையாகக் கிடைத்ததைக்கொண்டு காலந்தள்ளி கொஞ்சகாலம் கஷ்டப்படவேண்டும் - இல்லாவிட்டால் எப்படி ஜனநாயகம் செழிக்கும்? ஜனங்கள் சுதந்திரத்திற்கு லாயக்கற்றவர்கள்! நமது சர்க்கார் என்ற மதிப்பு இல்லாதபோது விடிவு எப்படி ஏற்படும்? இதுதான் நம்மிடையே உள்ள பெருங் குறை" என்று பதிலளித்தான் ராகவன்.)

பனத்தின் சேமிப்பை அதிகமாக்கிப் பணப் புழக்கத்தைக் குறைக்க, சர்க்கார் நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் தரக்கூடிய அளவிற்குப் பலனளிக்க வில்லை!

பணவீக்கத்தைத் தடுக்க 1948 அக்டோபரில் அரசாங்கம் ஒரு திட்டம் வகுத்தது. உற்பத்திச் செலவு நீங்கலாக மற்ற துறைகளில் செலவுகளைக் குறைக்க சில வழிகள் செய்தது. லாபப்பங்கீடுகளைக் குறைத்தது. உற்பத்திகள் பெருக வசதிகள் அளித்தது. பொருள் கட்டுப்பாடு, விலைக் கட்டுப்பாடு விதித்தது. ஆனால் 1949ல் நாணய மதிப்பு விழுந்துவிடவே, முயர்ச்சிகளுக்கு குந்தகம் விளைந்தது!

விலைவாசிகள் ஏறவுமில்லை, குறையவுமில்லை. இந்த நிலைமையில் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாகிவிட்டது. நாட்டின் வருமானம் குறைந்துவருகிறது.

சர்க்கார் தைரியமாகச் சில முறைகளைக் கடைபிடிக்கவேண்டும். "ஆயிரம் ரூபாய் நோட்டுகள் செல்லாது!" என்று சட்டமிருப்பதுபோல, வேறு பல பெருந்தகை நோட்டுகளுக்கும் சட்டம் போட்டு செலவாணியினின்று நீக்கவேண்டும். ஜனங்களிடமிருந்து நோட்டுகளைப் பெற்றுக்கொண்டு, புது நோட்டுகளை, மதிப்புக் குறைத்துக் கொடுக்கவேண்டும். உணவு நெருக்கடியைப் போக்க உற்பத்தியைப் பெருக்கவேண்டும். கட்டுப்பாடுகளை சரியாக நிர்வகிக்கவேண்டும். நாட்டிற்கு ஒத்துழைக்காதவர்களை கடுமையாகத் தண்டிக்கவேண்டும். தொழில்கள் தேசீயமாகிவிடும் என்ற பீதியினால், முதலாளிகள் புது உற்பத்தித் தொழில்களிலே ஈடுபட அஞ்சுகிறார்கள்; அந்த வெருட்சியைப் போக்கவேண்டும். வெளிநாட்டு மூலதனம் நம்நாட்டு உற்பத்தியைப் பெருக்கும் சூழ்நிலை ஏற்படுத்தவேண்டும். சர்க்கார் நடவடிக்கைகளினால், தவறான முறையிலே குவிந்த பணம் மூலதனமாக வெளிவருவதில்லை.இந்த நிலைமை போகவேண்டும். அப்பொழுது உற்பத்தி பெருகும்.

(ஜானகி குறும்பாகச் சிரித்தாள். "நாலு பேருக்கிடையே பேசும்பொழுது நீங்கள் பேசும் தோரணையைப் பார்த்தால், நீங்கள் ஏதோ புதுவழிகளைக் கடைபிடித்து சட்புட்டென்று பிரமாதமாக சாதித்துவிடுவீர்கள் என்று அல்லவா தோன்றும் எனக்கு? எல்லோரும் கோஷமிடுவதற்கும், நீங்கள் இப்பொழுது சொல்வதற்கும்

வித்தியாசமே காணோமே? நீங்கள் ஒன்றும் புதுமுறைகளைக் கடைபிடிக்கமாட்டீர்கள் போலத் தோன்றுகிறதே?" என்றாள் கிண்டலாக.)

"யார் வந்தாலும், இந்த அடிப்படைக் கொள்கைகளை வைத்துக்கொண்டுதான் நாட்டை சீர்படுத்தமுடியும்! இந்த முயற்சிகளிலேயே தீவிரமாக இருந்து, வெற்றியை நிலைநாட்டுவதில்தான் பெருமை முழுவதும் அடங்கும்!" என்று சொன்னான் ராகவன் ரோசமுடன்.

ஆனால் ஜானகிக்கு ஏனோ சப்பிட்டுவிட்டது. "ஆகக்கூடி நிலைமை சீராகிற வழியைக் காணோம். எல்லோரும் வாய்வீச்சோடு சரிபோலிருக்கு!" என்றாள் சளைக்காமல்.

"இன்னும் ஒரு வழி இருக்கிறது - அரசாங்கம் முயற்சி செய்யக்கூடும்! அமெரிக்காவில் தங்கம் மலிவாக விற்கிறது. நம் சர்க்கார் அதை வாங்கி, இங்கே விலை கூடுதலாக விற்கலாம். விலை கூடுதலாக விற்றாலும், இப்பொழுது விற்கும் விலையைவிட மிகக் குறைவாகவே இருக்கும். அதனால், ஜனங்கள் நிறையத் தங்கம் வாங்கிச் சேர்ப்பார்கள். நோட்டுக்கள் சர்க்கார் கையில் போகும். ஜனங்களிடையே பணச்சேமிப்பு தங்கம் ரூபத்தில் பெருகும் - பணப்புழக்கம் குறையும். பிறகு படிப்படியாக பணவீக்கத்தை ஒடுக்கிவிடலாம்!" என்று ராகவன் சொல்லி முடித்ததும் ஜானகி துள்ளி எழுந்தாள்!

"நிஜமாகவா? அப்படிச் செய்யலாமா? ஏன் செய்யவில்லை?" என்று கேட்டாள், ஆதுரமுடன்.

"தேர்தல் வறுகிறது. இதற்குப் பிறகு அப்படி நடக்ககூடும்! நிஜமாகத்தான்! ஆறுமாதத்திற்கு முன்பு மாங்காய் மாலை வாங்கணுமென்றபொழுது என்ன சொன்னேன் நான்? நினைவிருக்கா?"

"பவுன் விலை குறையும் என்று நீங்கள் சொன்னதை, அப்பொழுது நான் நம்பவில்லை! இப்பொழுது நம்புகிறேன்! அப்பாடா, கடைசியில் நல்ல சமாச்சாரம் சொன்னீர்களே!" என்று உவகைப் பொங்கக் கூறி நின்றாள் ஜானகி!

*********

(சுதேசமித்திரன், பிப்ரவரி 10, 1952)